தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

**9 வயதுப்பிரிவு**
(01.01.2016 – 31.12.2016 வரையில் பிறந்தோர்)

## மேஜர் சோதியா

தமிழீழ விடுதலைப் போராட்டம் தந்த முதலாவது பெண்தளபதி மேஜர் சோதியா. இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவி. 1984ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது பெண்கள் பாசறையில் பயிற்சி பெற்றார்.

இவர் ஆளுமையும் தலைமைத்துவப் பண்பும் கொண்டவர். முதன்முதலில் பெண்கள் அணி பங்கேற்ற மன்னார், அடம்பன் தாக்குதலிலே இவரது சமர்க்களம் தொடங்கியது. எமது மண்ணிலே நிலைகொண்டிருந்த இந்தியப் படையுடனான சமர்களில் களமாடியவர்.

மணலாற்றுக் காட்டுக்குள் பெண் போராளிகளை வழிநடத்திய பொறுப்பாளராகவும் மருத்துவராகவும் திகழ்ந்தவர். ‘விடியல்’ என்ற பெண்கள் பாசறையைச் செதுக்கிய சிற்பி இவர். வீரமும் தீரமும் மிக்க மேஜர் சோதியா அவர்கள் நோய் காரணமாக 11.01.1990 அன்று விடியலின் சோதியானார்.

இவரது பெயரைச் சொல்லும் வகையில் ‘சோதியா படையணி’ என்னும் பெண்கள் படையணியைத் தலைவர் மாமா உருவாக்கினார். மேஜர் சோதியா என்ற பேராளுமை தமிழீழ வீரவரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்.

நன்றி,

வணக்கம்.